BDO COPY

P3/7100/23

13053/21.
15.3.23.

மாவட்ட ஆட்சியர் அலுவலகம்
09 MAR 2023
சிவகங்கை மாவட்டம்

**சுருக்கம்**

பொதுப்பணிகள் - தமிழ்நாடு அமைச்சுப்பணி – கருணை அடிப்படை பணிநியமனம் - ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை – சிவகங்கை மாவட்டம் – பணியிடைக் காலமான துணை வட்டார வளர்ச்சி அலுவலர் திரு.க.சுகுமார் என்பவரின் மகன் திரு.சு.கார்த்திகேயன், இளநிலை உதவியாளர் நிலையில் ஊர்நல அலுவலர் நிலை II-ஆக பணி நியமனம் செய்யப்பட்டது – பணிவரன்முறை - ஆணை வெளியிடப்படுகிறது.

---

**ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (இ6) துறை**

10 - MAR 2023

அரசாணை (4ப) எண்:11

நாள்: 01.03.2023
சுபகிருது, மாசி 17,
திருவள்ளுவர் ஆண்டு 2054.

படிக்கப்பட்டவை:

1. அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் (க்யூ.1) துறை, நாள்:23.01.2020.
2. சிவகங்கை மாவட்ட ஆட்சித் தலைவரின் நேர்முக உதவியாளர் (வளர்ச்சி) செயல்முறை ஆணை ந.க.எண்.ப்பி3/13053/2021, நாள்:27.01.2022.
3. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையரின் கடித எண்.34216/2022/டி3, நாள்: 09.12.2022.

*****

**ஆணை:**

மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையரின் கடிதத்தில், சிவகங்கை மாவட்ட ஊரக வளர்ச்சி அலகில், சிவகங்கை ஊராட்சி ஒன்றியத்தில் துணை வட்டார வளர்ச்சி அலுவலர் ஆகப் பணிபுரிந்து 09.04.2021 அன்று பணியிடைக் காலமான திரு.க.சுகுமார், என்பவரின் வாரிசுதாரரும் மகனுமான திரு.சு.கார்த்திகேயன் என்பவருக்கு

மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட சிவகங்கை மாவட்ட ஆட்சித் தலைவரின் நேர்முக உதவியாளர் (வளர்ச்சி) செயல்முறையின்படி கருணை அடிப்படையில், சிவகங்கை மாவட்ட ஊரக வளர்ச்சி அலகில் இளநிலை உதவியாளர் நிலையில் ஊர்நல அலுவலர் நிலை II-ஆக தற்காலிகமாகப் பணிநியமனம் வழங்கப்பட்டு, அத்தனியர் 01.02.2022 முற்பகல் முதல் பணியேற்று பணிபுரிந்து வருவதால், அன்னாரின் பணியை வரன்முறை செய்து ஆணையிடும்படி அரசுக்கு முன்மொழிவு அனுப்பியுள்ளார்.

2. மேலும், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர் தனது கடிதத்தில், பணியிடைக் காலமான திரு.க.சுகுமார், துணை வட்டார வளர்ச்சி அலுவலர் தனது தகுதிகாண் பருவத்தினை 31.12.1999 பிற்பகல் நிறைவு செய்துள்ளார் என்றும் அவரது வாரிசுதாரரான அவரது மகன் திரு.சு.கார்த்திகேயன், கருணை அடிப்படையில் பணிநியமனம் வழங்கக் கோரி 15.06.2021 அன்று விண்ணப்பித்துள்ளார் என்றும், அவரது பிறந்த தேதி 01.03.1994 என்றும், தனியர் தனது இடைநிலைக் கல்வி பள்ளியிறுதி வகுப்புப் பொதுத் தேர்வில் (10-ம் வகுப்பு) மார்ச் 2009 அன்று தேர்ச்சி பெற்றுள்ளார் என்றும், தனியரின் குடும்பம் வறிய நிலையில் உள்ளது என்றும், பணிநியமனம் கோரி விண்ணப்பித்த நாளில் தனியரின் வயது 27 என்றும், தனியருக்கு பணி நியமனம் வழங்குவதற்கு இதர வாரிசுதாரர்கள் ஆட்சேபணை ஏதும் தெரிவிக்கவில்லை என்றும், அவருடைய குடும்பத்தில் எவரும் அரசு பணியில் இல்லை என்றும் தெரிவித்துள்ளார். மேலும், தனியர் 01.02.2022 முற்பகல் முதல் இளநிலை உதவியாளர் நிலையில் ஊர்நல அலுவலர் நிலை II-ஆக பணியில் சேர்ந்துள்ளார் எனவும் தெரிவித்துள்ளார்.

3. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையரின் முன்மொழிவு உரிய அசல் ஆவணங்களுடன் அரசால் மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையின்படி நன்கு ஆய்வு செய்யப்பட்டது. ஆய்வுக்குப்பின்னர், கருணை அடிப்படையில் பணிநியமனம் வழங்கும் திட்டத்தின்படி, இளநிலை உதவியாளர் நிலையில் ஊர்நல அலுவலர் நிலை II-ஆக பணிநியமனம் செய்யப்பட்டுள்ள திரு.சு.கார்த்திகேயன், என்பவர் பணிநியமனத்திற்கான அனைத்துத் தகுதிகளையும் பெற்றுள்ளதால், தனியரின் பணியினை தமிழ்நாடு அமைச்சுப் பணியில், சிவகங்கை மாவட்ட ஊரக வளர்ச்சி அலகில் இளநிலை உதவியாளர் நிலையில் ஊர்நல அலுவலர் நிலை II-ஆக பணியில் சேர்ந்த நாளான 01.02.2022 முற்பகல் முதல் அவர் அப்பணியிடத்திற்குரிய

உடற்தகுதி பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன் வரன்முறை செய்து அரசு ஆணையிடுகிறது. அவ்வாறு முன்தேதியிட்டு பணிவரன்முறை செய்யப்படுவதால் தனியர் ஆண்டு ஊதிய உயர்வுகள் பெற விதிகளின்படி தகுதியுடையவராகிறார்.

4. இவ்வாணை தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறையின் அலுவல் சாரா குறிப்பு எண்.615/ட்டி.1/2023-1, நாள்: 09.02.2023 மற்றும் மனித வள மேலாண்மைத் துறையின் அலுவல் சாரா குறிப்பு எண்.4101660/ஜி/2023, நாள்: 14.02.2023-இல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

பெ.அமுதா
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர், சென்னை-15.
மாவட்ட ஆட்சித் தலைவர், சிவகங்கை மாவட்டம்.
மாநிலக் கணக்காயர், சென்னை – 18.
கருவூல மற்றும் கணக்குத் துறை ஆணையர், சென்னை-15
மாவட்ட கருவூல கணக்கு அலுவலர், சிவகங்கை மாவட்டம்.

<u>நகல்:</u>
திரு.சு.கார்த்திகேயன், ஊர்நல அலுவலர் II,
சிங்கம்புணரி ஊராட்சி ஒன்றியம், சிவகங்கை மாவட்டம்.
(<u>வழி</u>:மாவட்ட ஆட்சித் தலைவர், சிவகங்கை மாவட்டம்.)
தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை, சென்னை-9.
மனித வள மேலாண்மைத் துறை, சென்னை-9.
இருப்புக் கோப்பு / உதிரி.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்